தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

18.04.2013 A.M

## வாழையில் அதிக மகசூலுக்கு தேவையான ஊட்டச் சத்துகள்!



வாழைக்கு உரிய ஊட்டச் சத்துகளை உரிய காலத்தில் வழங்கி உயர் மகசூல் காணலாம் என்று சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வாழைக்கு வழங்க வேண்டிய ஊட்டச்சத்துகளை பேரூட்டங்கள், நுண்ணூட்டங்கள் என்று இரு வகையாகப் பிரிக்கலாம். வாழைக்கு தழை, மணி, சாம்பல் சத்துகள் ஆகிய பேரூட்டங்களும், கால்சியம், மக்னீசியம், கந்தகம், மாங்கனீஸ், துத்தநாகம், இரும்பு, தாமிரம், போரான் ஆகிய நுண்ணூட்டங்களும் தேவைப்படுகின்றன. பேரூட்டங்கள் அதிகளவிலும், நுண்ணூட்டங்கள் குறைந்த அளவிலும் தேவைப்படுகின்றன.

**பேரூட்டங்கள்:**

1. தழைச்சத்து குறைபாடு அறிகுறிகள்: எல்லா இலைகளும் வெளிறிய பச்சை நிறத்தில் காணப்படும். இலையில் நடுநரம்பு, இலைக் காம்பு, இலை உறைகள் மற்றும் தண்டுப்பகுதி இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும். இலைகள் வெளிவருவது தாமதப்படும். இலைகளுக்கு இடையே இடைவெளி குறைவாக காணப்படும். தார்கள் மற்றும் காய்களின் அளவு சிறியதாகவும், தரம் குறைந்ததாகவும் காணப்படும்.

அறிகுறிகள் தெரிந்தவுடன் 100 கிராம் யூரியாவை ஒவ்வொரு மரத்துக்கும் இட்டு நன்குநீர் பாய்ச்ச வேண்டும்.

2. மணிச்சத்து குறைபாடு அறிகுறிகள்: மரத்தின் வளர்ச்சி குன்றி காணப்படும். வேர் வளர்ச்சி இருக்காது. முதிர்ந்த இலையில் ரம்ப பற்களின் அமைப்புபோன்று ஓரங்களில் பசுமையற்று காணப்படும். இளம் இலைகள் நீலப்பச்சை நிறத்தில் காணப்படும்.

அறிகுறிகள் தெரிந்தவுடன் ஒரு மரத்துக்கு 50 கிராம் டி.ஏ.பி. உரத்தையோ அல்லது 300 கிராம் சூப்பர் பாஸ்பேட் உரத்தையோ குழிப் பறித்து இட்டு உரங்கள் கரையும் அளவுக்கு நன்கு நீர் பாய்ச்ச வேண்டும்.

3. சாம்பல் சத்து குறைபாடு அறிகுறிகள்: அடி இலைகள் சீக்கிரமாக மஞ்சளாக மாறிக்காய்வது இச்சத்துப் பற்றாக்குறையின் மிக முக்கிய அறிகுறியாகும். முதலில் அடி இலையின் நுனி மற்றும் ஓரங்கள் மஞ்சளாக மாறி, பின் இலையின் உள்புறமாக நடுநரம்பு நோக்கிப் பரவி இலை முழுவதும் மஞ்சள் நிறமாக மாறி இலைகள் வாடி

இறந்து விடுகின்றன. மேலிருந்து 5, 6ஆம் இலைகள் வேகமாக மஞ்சளாக மாறுவது இன்னொரு முக்கிய அறிகுறி.

இலைகள் வெளிவருவது தாமதப்படும். தாரில் உள்ள காய்களின் எண்ணிக்கை குறையும். காய்கள் சிறுத்தும் தரம் குறைந்தும் காணப்படும். இதற்கு ஒரு லிட்டர் நீருக்கு 10 கிராம் அளவில் பொட்டாசியம் சல்பேட் கலந்து ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கலாம் அல்லது ஒரு மரத்துக்கு 225 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரத்தை 125 கிராம் யூரியாவுடன் கிண்ணம் பறித்து இட்டு நீர் பாய்ச்சலாம்.

**நுண்ணூட்டங்கள்:**

1. கால்சியம் சத்து (சுண்ணாம்பு சத்து) குறைபாடு அறிகுறிகள்: இலைகள் உருமாறி இலைப்பரப்பு குறைந்து, ஈட்டி போன்று காணப்படும். இலைகளின் ஓரங்களில் காய்ந்தும், இலையில் உள்ள நரம்புகள் தடித்தும் இருக்கும்.

ஒவ்வொரு மரத்துக்கும் 50 கிராம் நீர்த்த சுண்ணாம்பை மண்ணில் இட்டு நன்கு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

2. மக்னீசியம் சத்து குறைபாடு அறிகுறிகள்: இலைக்காம்பின் அடிப்புறம், இலை நடுநரம்பு ஆகிய பகுதிகளில் ஊதா கலந்த நீலம் மற்றும் பழுப்பு நிறத் திட்டுகள் காணப்படும். இவை இலை தேமல்

போல் தோற்றமளிக்கும். சில சமயம் நடுநரம்பு இலை மையப்பகுதி மஞ்சளாகவும், இலையின் ஓரங்கள் பச்சையாகவும் இருக்கும், தண்டில் இருந்து இலை உறைகள் பிரிந்து காணப்படும்.

ஒவ்வொரு மரத்துக்கும் 25 கிராம் மக்னீசியம் சல்பேட் இட்டு உடன் நீர் பாய்ச்ச வேண்டும்.

3. கந்தகச் சத்து குறைபாடு அறிகுறிகள்: நடுக்குருத்து இலை மஞ்சளாகவோ அல்லது வெள்ளையாகவோ காணப்படும். இலைகள் மிகவும் மென்மையாகவும், மிகவும் பலமற்றதாகவும் எளிதில்

கிழிந்துவிடக் கூடியதாகவும் இருக்கும். 3,6,7ஆம் மாதங்களில் கந்தகக் குறைபாடு ஏற்பட்டால் புதிய இலைகள் நன்கு வளர்ச்சி பெறாமல் சிறிதாகக் காணப்படும்.

இலைகளின் ஓரங்கள் காய்ந்தும், இலைகளின் நரம்புகள் புடைத்தும், இலைப்பரப்பு இல்லாமல் வெறும் நரம்புகள் கொண்ட இலைகளாகவும் இருக்கும். இதனால் மரத்தின் வளர்ச்சி குன்றி தார்கள் மிகச்சிறியதாகவோ அல்லது முற்றிலும் நீளாமல் குட்டையாகவோ காணப்படும். மரம் ஒன்றுக்கு கந்தகச்சத்து 15 சதவீதம் உள்ள 20:20:0:15 காம்பளக்ஸ் உரம் 20 கிராம் அல்லது 100 கிராம் அம்மோனியம் சல்பேட் உரமிட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

4. துத்தநாக சத்து குறைபாடு அறிகுறிகள்: இலைகள் வெள்ளையாக காணப்படும். இளம் இலைகள் மிகச் சிறியதாகவும், ஈட்டி முனைபோன்றும் காணப்படும். விரிந்த இலையில் வெளிறிய பச்சை நிற வளையங்கள் மாறி மாறி காணப்படும். காய்களின் நிறங்கள் வெளிறிய பச்சை நிறத்திலும், திருகியும், சிறியதாகவும் ஒல்லியாகவும் காணப்படும்.

மரம் ஒன்றுக்கு 15 முதல் 30 கிராம் துத்தநாக சல்பேட் இட்டு உடன் நீர் பாய்ச்ச வேணடும்.

5. மாங்கனீஸ் சத்து குறைபாடு அறிகுறிகள்: வாழையில் மேலிருந்து 2ஆம், 3ஆம் இலை ஓரங்கள் வெளிறிய நிறத்துடன் இருக்கும். இந்த வெளிறிய நிறம் பிரதான நரம்புகள் மூலம் நடுநரம்பு வரை பரவும். எனவே இலைநரம்புகள் வெளிறியும், இடைப்பட்ட பகுதிகள் பச்சையாகவும் காட்சியளிக்கும்.

ஏக்கருக்கு 16 கிலோ மாங்கனீஸ் சல்பேட் இட்டு நீர் பாய்ச்சலாம் அல்லது ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் மாங்கனீஸ் சல்பேட்டை ஒட்டும் திரவம் கலந்து இலைவழி தெளிக்கலாம்.

6. இரும்பு சத்து குறைபாடு அறிகுறிகள்: இளம் இலைகள் மஞ்சளாகவோ அல்லது வெள்ளையாகவோ இருக்கும்.

ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் இரும்பு சல்பேட்டை ஒட்டும் திரவம் கலந்து இலைவழி தெளிக்கலாம்.

7. தாமிரச் சத்து குறைபாடு அறிகுறிகள்: குருத்து இலை விரிவடையாமல் வால் போல் காட்சியளிக்கும். இலைகளில் பச்சையம் குறைந்து, இலைகள் வெளிர்பச்சை அல்லது மஞ்சள் நிறத்தில் காணப்படும். இலைகள் மிகவும் சிறுத்து காணப்படும்.

இக் குறைபாடு அதிகமாக உள்ளபோது இலைகள் வெள்ளையாக மாறி இலைகளின் எண்ணிக்கை குறைந்து மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் தாமிர சல்பேட்டை ஒட்டும் திரவம் கலந்து இலைவழி தெளிக்கலாம் அல்லது ஒரு லிட்டர் நீருக்கு 5 கிராம் என்ற அளவில் தாமிர சல்பேட் கலந்த கரைசலை மரத்துக்கு 2 முதல் 3 லிட்டர் வரை தேவைக்கேற்ப 10 நாள்கள் இடைவெளியில் 5 அல்லது 6 முறை மரத்தை சுற்றியும், குருத்துப் பகுதியிலும் ஊற்றலாம்.

8. போரான் சத்து குறைபாடு அறிகுறிகள்: இலைகள் வளைந்தும், இலை பரப்பு குறைந்து உருமாறியும் காணப்படும். இலையின் அடிப்பாகத்தில் இலை நரம்புகளுக்கு இணையாக வெள்ளை நிறப்பட்டைகள் காணப்படும். இளம் இலைகளில் இலை பரப்பு சிறுத்து காணப்படும். குருத்து இலைகள் விரிவடைவதில்லை. வேர் வளர்ச்சி தடைபடும். பூ வருவது நின்று விடும்.

சோடியம் டெட்ரா போரேட் என்ற போராக்ஸ் உப்பை மரம் ஒன்றுக்கு 25 கிராம் என்ற அளவில் மரத்தை சுற்றி மண்ணில் இட்டு நீர் பாய்ச்ச வேண்டும்.

விவசாயிகள், வாழை பயிரில் இந்த சத்துக்குறைபாடு அறிகுறிகள் காணப்பட்டால் பயிர் மாதிரியுடன் அருகிலுள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி குறைபாட்டை உறுதி செய்து கொண்டு, உரிய பரிந்துரையை பெற்று செயல்படுத்தி வாழையில் அதிக மகசூல் பெறலாம் என்றார் அவர்.

## எள் சாகுபடிக்கு மாறும் விவசாயிகள்



தஞ்சாவூர் மாவட்டத்தில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக இழப்பைச் சந்தித்த சம்பா சாகுபடி விவசாயிகள் இப்போது கோடை நெல், உளுந்து பயிர்களுக்குப் பதிலாக எள் சாகுபடியை நம்பிக்கையுடன் மேற்கொண்டு வருகின்றனர்.

தண்ணீர் பற்றாக்குறை காரணமாக குறுவை சாகுபடியைக் கைவிட்ட விவசாயிகள் பருவ மழையை எதிர்நோக்கி சம்பா சாகுபடி மேற்கொண்டனர். ஆனால், வறட்சி காரணமாக மகசூல் இழப்பு ஏற்பட்டதால், பெரும்பாலான விவசாயிகள் நஷ்டத்தை சந்தித்தனர்.

சம்பா அறுவடையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் உளுந்து சாகுபடியும் நிகழாண்டில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக மாவட்டத்தில் சுமார் 24,000 ஏக்கரில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. இது, இயல்பான பரப்பளவில் 40 சதவீதம் மட்டுமே.

சம்பா சாகுபடி தாமதமாகத் தொடங்கி பிப்ரவரி இறுதியில்தான் அறுவடை செய்யப்பட்டது. இதனால், நிகழாண்டு பெரும்பாலான விவசாயிகள் உளுந்து சாகுபடி மேற்கொள்ள முடியாமல் போனது. மேலும், மின் பற்றாக்குறை காரணமாக கோடை நெல் சாகுபடியையும் பெரும்பாலான விவசாயிகள் கைவிட்டனர்.

எனவே உளுந்து, கோடை நெல் சாகுபடி வாய்ப்பை இழந்த விவசாயிகள் எள் சாகுபடியை நம்பிக்கையுடன் தொடங்கியுள்ளனர். வழக்கமாக சித்திரைப் பட்டத்தில்தான் எள் சாகுபடி தொடங்கப்படும்.

ஆனால், உளுந்து பயிரிடுவதற்கு வாய்ப்பில்லாததால் எள் சாகுபடியை மார்ச் மாதத்திலேயே தொடங்கிவிட்டனர். மாவட்டத்தில் இதுவரை 4,100 ஹெக்டேரில் எள் பயிரிடப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒரத்தநாடு, திருவோணம், தஞ்சாவூர், அய்யம்பேட்டை, பாபநாசம், பட்டுக்கோட்டை (ஒரு பகுதி) ஆகிய ஒன்றியங்களில் அதிக அளவில் எள் சாகுபடி பரவலாக செய்யப்படுகிறது. இப்போது, இந்தப் பயிர் பூ பூக்கும் தருணத்தை எட்டியுள்ளது.

எனவே, நிகழாண்டு சித்திரை பட்டத்தில் எள் சாகுபடி பரப்பளவு ஏறத்தாழ 5,000 ஹெக்டேரை எட்டும் என எதிர்பார்க்கப்படுவதாக வேளாண் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்தது:

எள் பயிர் வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது மட்டுமல்லாமல், அதற்கான சாகுபடிச் செலவும் குறைவுதான். மொத்தம் 90 நாள் பயிரான எள் சாகுபடியில் பூச்சி தாக்குதலும் இருக்காது.

பாசனப் பகுதியில் ஏக்கருக்கு 500 கிலோவும், மானாவாரி பகுதியில் ஏக்கருக்கு 200 கிலோவும் மகசூல் கிடைக்கும். எனவே, நிகழாண்டு கோடை நெல், உளுந்து சாகுபடி வாய்ப்பை இழந்த விவசாயிகள் நல்ல விலை கிடைக்கும் என்பதால் எள் சாகுபடிக்கு மாறியுள்ளனர் என்றனர்.

தவிர, மோட்டார் பம்ப்செட் வசதியுள்ள நிலங்களில் ஏறத்தாழ 4,800 ஹெக்டேரில் கோடை நெல் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. என்றாலும், இது இயல்பான பரப்பளவைவிட மிகவும் குறைவு.

## சென்னையில் ஆவின் பால் விற்பனை அதிகரிப்பு

சென்னையில் ஆவின் பால் விற்பனை 11.25 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது என முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார். மேலும், சென்னை நகரைச் சுற்றியுள்ள பால் பண்ணைகளுக்கு கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவதற்கான அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்.

சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ் முதல்வர் ஜெயலலிதா படித்தளித்த அறிக்கை:

சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 10.20 லட்சம் லிட்டராக இருந்த பால் விற்பனை 11.25 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது. பெருகி வரும் பாலின் தேவையைக் கருத்தில் கொண்டு, ரூ.37.90 கோடி செலவில் பால் கையாளும் திறன் மேம்படுத்தப்படும். அதன்படி, அம்பத்தூர் பால் பண்ணையில் சக்தி சேமிப்பு உயர்நிலை அழுத்தக் கருவிகள், பால் திடப்படுத்தும் கருவிகள், வெப்பம் ஊடுருவாத கவர் மற்றும் தானியங்கி இயந்திரங்கள் ரூ.14.25 கோடி செலவில் வாங்கப்படும்.

சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் மணிக்கு 6 ஆயிரத்து 500 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட உச்ச வெப்பநிலையில் பதப்படுத்தப்பட்ட பாலை நுண்ணுயிர் நுழையாத பைகளில் அடைக்கும் இயந்திரம் ரூ.10 கோடி செலவில் அமைக்கப்படும்.

மாதவரம் பால் பண்ணையில் சக்தி சேமிப்புக் கருவியுடன் கூடிய உறைநிலை நீர்த் தொட்டிக் கருவிகள், புதிய குளிர்விக்கும் கருவிகள் மற்றும் பசுமை பால்பண்ணை சார்ந்த திட்டங்கள் ரூ.5.80 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

சென்னை மாநகர பால் பண்ணைகளில் உணவு பதப்படுத்துதல் திட்டத்தின் கீழ், குளிரூட்டம் செய்வதற்கான வசதிகள் ரூ.8 கோடி செலவில் செய்யப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஏப்.19) பிற்பகல் 3.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு, தங்களது குறைபாடுகள் குறித்து மனு அளித்து தீர்வு காணலாம் என்று, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ. முத்தையா தெரிவித்தார்.

## கதிரடிக்கும் இயந்திரம் வாங்க ரூ.1.50 லட்சம் மானியம்

தமிழக அரசின் வேளாண் பொறியியல் துறை சார்பில், விவசாயிகள் கதிரடிக்கும் இயந்திரம் வாங்க மானியமாக ரூ.1.50 லட்சம் வழங்கப்படுகிறது என, வீரபாண்டியில் புதன்கிழமை நடந்த உழவர் பெருவிழாவில் தெரிவிக்கப்பட்டது.

வீரபாண்டி பேரூராட்சி மற்றும் அதையொட்டிய பகுதிகளில் வசிக்கக்கூடிய விவசாயிகளுக்காக நடத்தப்பட்ட இவ்விழாவின் தொடக்க நிகழ்ச்சிக்கு, தம்பு மேல்நிலைப் பள்ளி செயலர் சித்ரா முன்னிலை வகித்தார். பேரூராட்சித் தலைவர் கே.வி.என்.ஜெயராமன் தலைமை வகித்து, குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

வேளாண்மை உதவி இயக்குநர் சபி அகமது, இவ்விழா நடத்தப்படுவதன் நோக்கம் குறித்து பேசினார்.

வேளாண் பொறியியல் துறை சார்பில் அதிகாரி சித்ரா பேசியது: இத்துறை மூலம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல பயிர் கதிரடிக்கும் இயந்திரம் வாங்க ரூ.1.50 லட்சமும், களை எடுக்கும் கருவி, நெல் நடும் இயந்திரம் ஆகியவை வாங்க தலா ரூ.1.25 லட்சமும், லேசர் மூலம் நிலத்தை சமன் செய்யும் கருவி வாங்க ரூ.1.70 லட்சமும், தேங்காய் உரிக்கும் இயந்திரம் வாங்க ரூ.50 ஆயிரமும் மானியமாக வழங்கப்படுகிறது. இது தவிர ஏராளமான

மானியத் திட்டங்களும் உள்ளன. இவற்றை விவசாயிகள் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தோட்டக் கலைத் துறை சார்பில் கிருஷ்ணமூர்த்தி, பட்டு வளர்ச்சித் துறை சார்பில் ஷாநவாஸ், வேளாண் விற்பனைத் துறை சார்பில் கண்ணன், விதைச் சான்றளிப்புத் துறை சார்பில் நிர்மலா, கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் டாக்டர் தமிழரசன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் டாக்டர் திலக் ஆகியோர் பேசினர்.

விதைப் பண்ணை அமைக்க வி.பி.கணேசனுக்கு ரூ.2 லட்சம், சித்ரா சம்பத்குமாருக்கு ரூ.1.7 லட்சத்திற்கான காசோலைகள், விவசாயிகள் ஒருங்கிணைந்த அடையாள அட்டைகள், கொண்டைக் கடலை மூட்டைகள் ஆகியவற்றை கே.வி.என்.ஜெயராமன் வழங்கினார்.

விழாவில் கவுன்சிலர்கள் சுரேஷ், வி.பி.கே.மணியன், கே.பழனிச்சாமி உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

## மீன் பண்ணை அமைக்க 50 சதவீத மானியம்

திருப்பூர் மாவட்டத்தில் மீன் பண்ணை, மீன் குஞ்சு வளர்ப்புக்கு 50 சதவீத மானிய வழங்கப்படுகிறது.

இது குறித்து ஆட்சியர் கு.கோவிந்தராஜ் புதன்கிழமை வெளியிட்ட செய்தி:

மீன் வளத்துறையின் சார்பில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் மீன் பண்ணை அமைத்தல், மீன் குஞ்சுகள் வளர்ப்புக்குத் தகுதியான விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டத்தில் திருப்பூர் மாவட்டத்தில் 25 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது.

மீன் பண்ணை அமைப்பதற்கு 2,500 சதுர மீட்டர் பரப்பளவில் தண்ணீர் வசதி உள்ள குட்டை வைத்திருப்போர் இதற்கு விண்ணப்பிக்கலாம். மீன் குஞ்சுகள் செலவினமாக ரூ.5 ஆயிரம், மீன்களுக்கான தீவனம் 1,500 கிலோவிற்கு ரூ.37,500, இயற்கை உர செலவினம் ரூ.1,500, மீன்கள் வளர்ந்த பிறகு அதை விற்பனை செய்வதற்கான செலவு ரூ.2,000 என மொத்தம் ரூ.46 ஆயிரம் மீன் பண்ணை அமைக்க ஏற்படும் செலவில் 50 சதவீத மானியமாக ரூ.23,000 வழங்கப்படும். இதற்கான பயிற்சியும் அளிக்கப்படும்.

இது தொடர்பாக ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை, வீரப்பம்பாளையம் பிரிவு எண்.4, எஸ்.வி. காம்ப்ளக்ஸில் அமைந்துள்ள மீன்வளத்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன் வளர்ப்பு) அலுவலகத்திற்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

## பவானிசாகர் அணை  நீர்மட்டம் 43.14 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 43.14 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 74 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீரும், வாய்க்காலில் 2 ஆயிரம் கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 2.99 டி.எம்.சி.

## பந்தலூரில் உழவர் பெருவிழா துவக்கம்

பந்தலூரில் தோட்டக்கலைத் துறை சார்பில் உழவர் பெருவிழா புதன்கிழமை துவங்கியது.

÷பொன்னானி அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியில் நடைபெற்ற துவக்க விழா நிகழ்ச்சிக்கு தோட்டக் கலை உதவி இயக்குநர் (பொ) எஸ்.ஜெயலட்சுமி தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் இந்திராணி, வார்டு கவுன்சிலர் விஜயன், மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

÷உதவி செயற்பொறியாளர் வீ.ரவீந்திரன், கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் கி.சுரேஷ், உதவி விதை அலுவலர் ராமலிங்கம், உபாசி கள அலுவலர் அன்பரசு, சொட்டு நீர் பாசன கள அலுவலர் அய்யாக்கண்ணு, வேளாண் விற்பனை துறை உதவி அலுவலர் லட்சுமணன் ஆகியோர் வேளாண் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர். முன்னோடி விவசாயிகள் பத்மராஜா, ஸ்ரீதரன், சிவகுமார் ஆகியோர் உரையாற்றினர்.

÷தோட்டக்கலைத் துறை திட்டங்கள் குறித்தும், அவற்றை பெற அணுகவேண்டிய வழிமுறைகள் குறித்தும் விழாவில் விளக்கமளிக்கப்பட்டது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

18.04.2013 A.M

## இந்திய அரிசியை இறக்குமதி செய்ய ரஷ்யா மறுப்பு:தடையை நீக்க மத்திய அரசுகோரிக்கை



மும்பை;இந்திய அரிசி மற்றும் நிலக்கடலை இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டும் என, ரஷ்யா விடம் மத்திய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

**ஐந்து மடங்கு:**சென்ற, 2012ம் ஆண்டு, ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான ஒன்பது மாதங்களில், ரஷ்யாவிற்கான அரிசி ஏற்றுமதி, ஐந்து மடங்கு அதிகரித்து, 2.5 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இது, முந்தைய ஆண்டின் இதே காலத்தில், 45 லட்சம் டாலராக இருந்தது.இந்திய வேளாண் பொருட்களை, ரஷ்யா அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது. குறிப்பாக, மாட்டிறைச்சி, பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் போன்றவற்றின் இறக்குமதி அதிகரித்து வருகிறது.இந்நிலையில், இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் அரிசியில், வண்டுகள் காணப்பட்டதாக ரஷ்யா புகார் தெரிவித்தது.

இதை அடுத்து, சென்ற பிப்ரவரியில், இந்திய அரிசி, நிலக்கடலை ஆகியவற்றின் இறக்குமதிக்கு, ரஷ்யா தடை விதித்துள்ளது.இந்த தடை உத்தரவால், ஏற்றுமதி பாதிக்கப்படுவதை தடுக்க, மத்திய அரசு பல்வேறு நடவடிக்கை களை எடுத்து வருகிறது. இதன்படி, ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசி, நிலக்கடலை ஆகியவற்றுக்கு, சுகாதார சீர்கேடின்மை சான்றிதழ் வழங்கிய, இரு அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

**அங்கீகாரம் ரத்து :**மேலும், ரஷ்யாவிற்கான ஏற்றுமதி பெட்டகங்களில், பூச்சி தடுப்பு பணியை மேற்கொண்ட, இரு இந்திய நிறுவனங்களின் அங்கீகாரமும் ரத்து செய்யப்பட்டுள்ளது.இத்துடன், ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் வேளாண் பொருள்களின் தன்மை குறித்து, மிகுந்த எச்சரிக்கையுடன், ஆய்வு செய்து சான்றளிக்க வேண்டும் என, அனைத்து ஆய்வாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், ரஷ்யாவின் அறிவுறுத்தலின் பேரில், அந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் மாட்டிறைச்சிக்கு, மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற, ஆய்வகங்களின் சான்றிதழ் அளிக்கவும், இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது.

**சந்தை வாய்ப்பு:**இத்தகைய நடவடிக்கைகளை அடுத்து, இந்திய அரிசி, நிலக்கடலை ஆகியவற்றின் ஏற்றுமதிக்கு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என, ரஷ்யாவை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.இதுகுறித்து, மத்திய வர்த்தக அமைச்சக உயரதிகாரி ஒருவர் கூறியதாவது:ரஷ்யாவில் மாட்டிறைச்சி சந்தையில் ஏற்றுமதி வாய்ப்பு அதிகம் உள்ளது. இதை இழக்க, இந்தியா விரும்பவில்லை. இந்தியா, 60க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்து வருகிறது. இதுவரை எந்த புகாரும் வரவில்லை. ஆனால், ரஷ்ய அதிகாரிகளின் தரக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் மிக கடுமையாக உள்ளன.

**சான்றிதழ்:**எனினும், மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களின் தரச் சான்றிதழை, ரஷ்யா ஏற்க வேண்டும் என, கேட்டுக் கொண்டுள்ளோம்.இது தொடர்பாகவும், சுகாதார சான்றிதழ் உள்ளிட்ட, அனைத்து பிரச்னைகள் குறித்தும், விவாதிக்க, இம்மாத இறுதியில் இந்தியா வருமாறு, ரஷ்ய கால்நடை மற்றும் சுகாதார கண்காணிப்பு துறை அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார். இந்தியா - ரஷ்யா இடையிலான பரஸ்பர வர்த்தகம், சென்ற, 2012ம் ஆண்டு, முந்தைய ஆண்டை விட, 14 சதவீதம் வளர்ச்சி கண்டு, 670 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

## பதப்படுத்தப்பட்ட தயிர் சந்தைமதிப்பு ரூ.1,200 கோடியாக உயரும்



புதுடில்லி:நாட்டின் அமைப்பு சார்ந்த பதப்படுத்தப்பட்ட தயிர் சந்தை மதிப்பு, வரும் 2015ம் ஆண்டிற்குள், 1,200 கோடி ரூபாயாக உயரும் என, "அசோசெம்' அமைப்பு தெரிவித்துள்ளது.தற்போது, இத்துறையின் சந்தை மதிப்பு, 750 கோடி ரூபாயாக உள்ளது. மக்களின் செலவிடும் வருவாய் உயர்ந்து வருவதாலும், கொழுப்பு குறைந்த உணவுப் பொருட்களின் பயன்பாடு பற்றிய விழிப்புணர்வாலும், பதப்படுத்தப்பட்ட தயிர் சந்தை வளர்ச்சி கண்டு வருகிறது.இருப்பினும், போதிய அளவிற்கு குளிர் சாதன கிடங்கு வசதி இல்லாததால், இத்துறை நிறுவனங்கள், பதப்படுத்தப்பட்ட தயிரை, நகரங்களுக்கு வினியோகிப்பதில், பெரும் இடர்பாட்டை சந்தித்து வருகின்றன என, "அசோசெம்' அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## கிராமங்களில் உழவர் பெருவிழா

பெத்தநாயக்கன்பாளையம்: பெத்தநாயக்கன்பாளையம் அருகே, புத்திரகவுண்டன்பாளையம், பழனியாபுரி, தளவாய்பட்டி, மேட்டுப்பாயைம், ஓலப்பாடி ஆகிய கிராமங்களில், வேளாண்த்துறை சார்பில், உழவர் பெருவிழா நடந்தது.

இதில், வேளாண் பல்கலைக விஞ்ஞானிகள், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு, கருத்துக் காட்சி, செயல்விளக்கம், தொழில் நுட்ப விளக்கம் அளித்தனர். தொடர்ந்து, கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. விழாவில், பெத்தநாயக்கன்பாளையம் யூனியன் சேர்மன் இளங்கோவன், வேளாண்துறை அலுவலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், பஞ்சாயத்து தலைவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இன்று, (18ம் தேதி) தென்னம்பிள்ளையூர், ஒட்டப்பட்டி, 19ம் தேதி வீரக்கவுண்டனூர், முத்தாக்கவுண்டனூர், 20ம் தேதி ஆரியப்பாளையம், களரம்பட்டி, 21ம் தேதி கோபாலபுரம், ரங்கப்பநாயக்கன்பாளையம், 22ம் தேதி உமையாள்புரம், ஏ.கரடிப்பட்டி, 24ம் தேதி மேற்குராஜாபாளையம், 25ம் தேதி வடுகத்தம்பட்டி, தமையனூர், 26ம் தேதி சின்னகிருஷ்ணாபுரம், மேட்டுடையாம்பாளையம், 27ம் தேதி கொட்டவாடி, பி.கரடிப்பட்டி, 29ம் தேதி பெரியகிருஷ்ணாபுரம், 30ம் தேதி கல்லேரிபட்டி ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழா நடக்கிறது.

## சாய்ந்து காணப்படும் மின்கம்பம் அச்சத்தில் பயிர் செய்யும் விவசாயிகள்

ஊத்துக்கோட்டை : சாய்ந்த நிலையில் உள்ள மின் கம்பம், எப்போது கீழே விழுந்து அபாயம் ஏற்படுத்துமோ என்ற மரண பீதியில், விவசாயிகள் பயிர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு

உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, மக்களின் முக்கிய தொழில் விவசாயம். தற்போது, சிலர் விவசாய நிலங்கள் குடியிருப்பு பகுதிகளாக மாறும் நிலையில், பெரும்பாலானோர் விவசாயம் செய்து வருகின்றனர். விவசாய நிலங்களில் மின்கம்பி செல்லும் வகையில், மின்வாரியம் மின்கம்பத்தை நிறுவி, அதன் வழியே கம்பி மூலம் மின்சாரம் செல்கிறது. மின்வாரிய அதிகாரிகள், உரிய முறையில் பராமரிப்பு செய்யாத காரணத்தால், சில இடங்களில் மின்கம்பங்கள் மீது செடிகள் வளர்வது, கம்பிகள் தாழ்வாக செல்வது, மின்கம்பம் சாய்ந்து காணப்படுவது ஆகிய நிகழ்வுகள், விவசாய நிலத்தின் பல பகுதிகளில் காணப்படுகின்றன. பூண்டி ஒன்றியம், ஸ்ரீராமகுப்பம் பகுதியில் கிருஷ்ணா நீர் செல்லும் கால்வாய் ஒட்டி உள்ள, விவசாய நிலத்தில் சாய்ந்த நிலையில் உள்ள மின்கம்பமே இதற்கு உதாரணம். இங்கு பயிர் செய்யும் விவசாயிகள் சிலர் கூறுகையில், "பல ஆண்டுகளாக, நாங்கள் இப்பகுதியில் விவசாயம் செய்து வருகிறோம். ஒரு ஆண்டிற்கு மேலாக, இப்பகுதியில் மின்கம்பம் சாய்ந்த நிலையில் காணப்படுகிறது. மிகப் பெரிய அளவில் ஆபத்து ஏற்படுவதற்கு முன்பாக, இதை சரி செய்ய வேண்டும்' என, ஆதங்கத்துடன் கூறினர். இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத ஊத்துக்கோட்டை மின்வாரிய அதிகாரி ஒருவர் கூறுகையில், "உடனடியாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, சாய்ந்த மின்கம்பம் சீர் செய்யப்படும்' என்றார்.

## உழவர் கடன் அட்டை வினியோகம்

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, இந்தியன் வங்கிக் கிளைகளில், விவசாயிகளுக்கு, மறு சீரமைக்கப்பட்ட உழவர் கடன் அட்டை வழங்கப்படுகிறது.இதுகுறித்து, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் வாசுதேவன் கூறியதாவது:அனைத்து வங்கிகளிலும், பயிர் கடன் பெறும் விவசாயிகளுக்கு, உழவர் கடன் அட்டை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இப்புதிய அட்டைகளை பயன்படுத்தி, விவசாயிகள் வங்கியிலிருந்து பணம் எடுக்க முடியும். மேலும் வங்கி அதிகாரிகள், வேளாண் அதிகாரிகள் கொண்ட குழு, ஒவ்வொரு விவசாயியும் அவருடைய நிலத்தில் என்ன பயிரிடுகிறார் என்பதை கேட்டறிந்து, அவற்றுக்காகும் செலவு விவரங்களை கணக்கிட்டு, அவருக்கு எவ்வளவு கடன் தொகை வழங்கலாம் என, நிர்ணயம் செய்வர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

அரியலூர்: அரியலூரில் வரும் 19ம் தேதி விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடக்கிறது. அரியலூர் மாவட்ட கலெக்டர் ரவிக்குமார் வெளியிட்ட அறிக்கை:

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள கூட்ட மன்றத்தில், 19ம் தேதி காலை 11 மணிக்கு நடக்கிறது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட் கடன் உதவிகள், வேளாண் இடுபொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாய மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். அன்றையதினம் விவசாயிகள் திரளாக பங்கேற்று, தங்களது விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகளை தெரிவிக்கலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பூத்துக் குலுங்கும் கொன்றை மலர்கள்

வேலாயுதம்பாளையம்: சித்திரை மாதத்தையொட்டி பொன்னிற கொன்றை மலர்கள் சரம், சரமாக பூத்துக் குலுங்குகின்றன.

சரக்கொன்றை மரம், கிராமப் பகுதியில் மிக அரிதாகவே காணப்படுகிறது. இந்த மரம் சித்திரை மாதத்தில் மட்டும் பூ பூக்கும் இலையுதிர் வகையைச் சேர்ந்த மரமாகும். சிவபெருமானுக்கு உகந்த மலர் என்பதால், பல கோவில்களில் தலவிருட்சமாக உள்ளது. இதற்கு சித்திரைப் பூ, சுவர்ண புஷ்பம் என்ற பெயர்களும் உண்டு.

சரக்கொன்றை மரத்தின் பூ, இலை மற்றும் மரப்பட்டையில் மருத்துவ குணம் உள்ளது. பல்வேறு நோய்களுக்கு மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. வெப்ப மண்டலம் மற்றும் குறை வெப்ப மண்டலப் பகுதிகளில் நன்கு வளரக் கூடியது. நீர் வடியக்கூடிய நிலத்தில் சிறப்பாக வளரும். கோடையின் வறட்சியையும் தாங்கக் கூடியது.

சித்திரை மாதத்தில் மட்டும், மஞ்சள் நிறத்தில் பூத்துக் குலுங்கும். ஓரடி நீளத்துக்கு அதிகமாக வளரும், இந்த பூச்சரங்கள் பொன்னிறமாக ஜொலிக்கும். புத்தாண்டு மாதத்தில் சரக்கொன்றை மலரை பார்ப்பதால், வாழ்வில் வளம் கூடும். ஆண்டு முழுவதும் இனிமையாக அமையும் என்பது நம்பிக்கை. கேரளாவிலும் விஷூ கனி தரிசனத்தில் கொன்றை மலர் நிச்சயம் இடம் பெறும். கரூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ரோட்டோரம் மற்றும் குடியிருப்பு பகுதிகளிள் இவ்வகை மரங்கள் காணப்படுகிறது. வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகள், டி.என்.பி.எல்., குடியிருப்பு மற்றும் சத்திரம் ரோட்டோரங்களில் மஞ்சள் நிரத்தில் பூக்கள் கொத்துக் கொத்தாக பூத்துள்ளன.

இரவு நேரங்களில் சாலையில் ஆள்நடமாட்டம் குறைந்து காணப்படும் போது மஞ்சள் பட்டு

உடுத்திய போர்வைபோல் காட்சியளிப்பதால், கண்களுக்கு இதமாக காட்சி கொடுக்கின்றது. பலருக்கும் இம்மரத்தின் மகிமை தெரியாது என்ற போதும், இத்தகைய மரத்தை இவ்வழியே செல்வோர் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

## கோடையால் காய்கறி விலை கடும் உயர்வு எலுமிச்சை விலையில் மட்டுமே ஆறுதல்

திருச்சி: வறுத்தெடுக்கும் கோடை வெயிலால் காய்கறி வரத்து குறைந்து, கடுமையாக விலை உயர்ந்துள்ளது. சித்திரை மாதம் பெரிய அளவில் திருமண நிகழ்வுகள் நடக்காது என்பதால், காய்கறி விலை மேலும் உயர வாய்ப்பு குறைவு என்பது மட்டுமே ஆறுதல் தந்துள்ளது.

கோடை வெயில் வறுத்தெடுக்கத் துவங்கியதை அடுத்து, திருச்சியில் காய்கறி, பழங்களின் விலை தாறுமாறாக உயரந்துள்ளது. சமயபுரம் தேர் திருவிழாவால், காய்கறிகள் கூடுதல் விலையேற்றம் கண்டன.

வழக்கமாக சித்திரை திருவிழாவை முன்னிட்டு, காய்கறி விலை சற்றே உயர்ந்தே இருக்கும். நடப்பாண்டு, கோடை வெயில் கடுமையாக தகிப்பதால், காய்கறி வரத்து குறைந்து, விலை உயர்ந்தது.

இரண்டு நாட்களுக்கு முன், கத்திரிக்காய், 50, வெண்டைக்காய், 45, புடலங்காய், 25, அவரக்காய், 40, பாவற்காய், 35, பீன்ஸ், 108, கேரட், 45, பீட்ரூட், 40, என காய்கறி ரேட், உச்சி வெயிலை காட்டிலும், சுள்ளென்று இருந்தது.

சமயபுரம் தேர்திருவிழா முடிந்தால், சற்றே விலையின் தாக்கமும் தணிந்தது. ஆயினும், சாதாரண ஏழை, எளிய மக்கள் வாங்கி உபயோகிக்கும் அளவுக்கு காய்கறி விலை குறையவில்லை.

திருச்சி தென்னூர் உழவர் சந்தையில் நேற்றை காய்கறி நிலவரம் ஒரு கிலோவுக்கு வருமாறு: தக்காளி, 15, 18, 22, கத்திரிக்காய், 25, 30, 38, அவரக்காய், 54, வெண்டைக்காய், 30, கொத்தவரங்காய், 24, புடலங்காய், 24, பீர்க்கங்காய், 24, பாவற்காய், 28, முருங்கக்காய், 24, முள்ளங்கி, 20, தட்டக்காய், 20, மாங்காய், 12, 16, பரங்கி, பூசனி, 12, சுரக்காய், 10, பச்சைமிளகாய், 34, மல்லி, 24, புதினா, 16, கருவப்பில்லை, 30, இஞ்சி, 90, கருனைக்கிழங்கு, 30, சேனை, 22, சேப்பங்கிழங்கு, 50, சுண்டைக்காய், 40, பெரியவெங்காயம், 18, சின்னவெங்காயம், 44, உருளை, 24, கேரட், 38, பீன்ஸ், 94, கோஸ், 18, சவ்சவ், 26, பீட்ரூட், 34.

இதுகுறித்து காய்கறி வியாபாரி ரமேஷ் கூறியதாவது:

கோடை வெயிலால் காய்கறி வரத்து குறைந்துள்ள நிலையில், சமயபுரம் சித்திரை தேர் திருவிழா நடந்ததால், காய் விலை கடுமையாக உயர்ந்தது. திருவிழா முடிந்ததால், விலை குறைந்தது.

மேலும், சித்திரை மாதம் பெரிதாக திருமணம் எதுவும் நடக்காது. அதனால், காய்கறி விலை உயராது. காய்கறி வரத்து இல்லாததால், அதற்கு வாய்ப்பு குறைவு.

இவ்வாறு அவர் கூறினார்.

காய்கறி விலை மட்டுமல்ல, கோடை வெயிலால் பழங்களின் நுகர்வும் அதிகரித்துள்ளதால், அவற்றின் விலையும் விண்ணைத் தொட்டுள்ளது. பழங்களின் விலை ஒரு கிலோவில் வருமாறு: கொய்யா, 28, பப்பாளி, 20, சாத்துக்குடி, 40, திராட்சை, 60, ஆப்பிள், 150, மாதுளை, 150, தர்பூசனி, 16, முலாம்பழம், 20. மாம்பழம், ரகம் வாரியாக, 40 முதல், 90 வரை விற்கப்படுகிறது. பலாப்பழம், பழத்தின் அளவை பொருத்து, 50 முதல், 350 ரூபாய் வரை கிடைக்கிறது. இருப்பதிலேயே எலுமிச்சை பழம் மட்டும் தான், 2, 3, 4 என மலிவான விலையில் கிடைக்கிறது. அதையும் சாறாக்கி, 10, 15 ரூபாய்க்கு விற்பனை செய்கின்றனர்.

## சம்பா சாகுபடி விவசாயிகளுக்கு ரூ.21 லட்சம் டீஸல் மானியம்

திருச்சி: திருச்சி மாவட்டத்தில், டீஸல் இன்ஜின்களை பயன்படுத்தி, சம்பா சாகுபடி செய்த 1,463 விவசாயிகளுக்கு 21, லட்சம் ரூபாய் டீஸல் மானியம் வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் 31 மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக தமிழக அரசு அறிவித்தது. இதில், டெல்டா மாவட்டத்தில் டீஸல் இன்ஜின்களை பயன்படுத்தி, சம்பா சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, டீஸல் மானியம் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது.

இதன் அடிப்படையில் திருச்சி மாவட்ட காவிரி டெல்டா பாசன விவசாயிகளுக்கு, அதிகபட்சமாக ஓர் ஏக்கருக்கு 600 ரூபாய் அல்லது பயன்படுத்தப்பட்ட டீஸல் அளவில் 50 சதவீத தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இந்த வகையில், தொட்டியம் தாலுக்காவில் 143 பேருக்கு 2.07 லட்ச ரூபாய், முசிறி தாலுக்காவில் 181 பேருக்கு 2.35 லட்ச ரூபாய், திருவெறும்பூர் தாலுக்காவில் 248 பேருக்கு 4.54 லட்ச ரூபாய், அந்தநல்லூர் வட்டத்தில் 184 பேருக்கு 2.49 லட்ச ரூபாய், மணிகண்டம் வட்டத்தில் 130 பேருக்கு 1.88 லட்ச ரூபாய், லால்குடி வட்டத்தில் 407 பேருக்கு 5.37 லட்ச ரூபாய், மண்ணச்சநல்லூர் தாலுக்காவில் 83 பேருக்கு 1.03 லட்ச ரூபாய் என மொத்தம் 1,463 விவசாயிகளுக்கு 20.91 லட்ச ரூபாய் வழங்கப்பட உள்ளதாக, மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## தமிழக ஆடுகளுக்கு சந்தையில் வரவேற்பு ஓசூரில் குவியும் வெளி மாநில வியாபாரிகள்

ஓசூர்: தமிழக ஆடுகளுக்கு கர்நாடகாவில் நல்ல வரவேற்பு உள்ளதால், இரட்டிப்பு விலைக்கு விற்பனையாகிறது. ஓசூர் எம்.ஜி.ஆர்., மார்க்கெட்டில் நேற்று விற்பனைக்கு ஆடுகள் வரத்து குறைந்ததால், எதிபார்த்த ஆடுகள் கிடைக்காமல் கர்நாடகா வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

ஓசூர் எம்.ஜி.ஆர்., மார்க்கெட்டில் புதன்கிழமை தோறும் ஆட்டு சந்தை நடக்கும். இந்த சந்தைக்கு ஓசூர், பாகலூர், பேரிகை, உத்தனப்பள்ளி, ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதி விவசாயிகள், தங்கள் ஆடுகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

கர்நாடகா, ஆந்திரா மற்றும் உள்ளூர் வியாபாரிகள், இந்த சந்தையில் ஆடுகளை வாங்கி வட மாநிலங்களுக்கு இறைச்சிக்காக லாரிகளில் அனுப்பி வைக்கின்றனர். ஒவ்வொரு வாரமும் கூடும் இந்த சந்தையில் ஆயிரம் முதல், 3,000 ஆடுகள் வரை விவசாயிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

நேற்று கூடிய சந்தையில், 300 ஆடுகள் மட்டுமே விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஓசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் கர்நாடகா மாநில மக்கள், கடந்த வாரம் தெலுங்கு வருட பிறப்பான யுகாதி பண்டிகையை கொண்டாடினர்.

இந்த பண்டிகையில் தெலுங்கு மக்கள், இறைச்சிக்காக அதிகளவு ஆடுகளை வாங்கினர். அதனால், விவசாயிகள் யுகாதி பண்டிகையை குறிவைத்து கடந்த வார சந்தையில் அதிகளவு ஆடுகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். நேற்று பண்டிகை முடிந்த பின் நடந்த சந்தை என்பதால், விவசாயிகள் குறைந்தளவு ஆடுகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

நேற்று ஆட்டின் விலை செம்மறி ஆடு, வெள்ளாடுகள் விலை "கிடுகிடு'வென உயர்ந்தது. ஒரு ஆட்டின் விலை குறைந்தப்பட்சம், 3,500 ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. நேற்றைய சந்தையில் கூடுல் விலைக்கு ஆடுகள் விற்பனையானதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

சந்தைக்கு எதிர்பார்த்த ஆடுகள், தரமான ஆடுகள் விற்பனைக்கு வராததால், கர்நாடகா மாநில வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர். ஓசூர் ஒன்னல்வாடியை சேர்ந்த கர்நாடகா வியாபாரி சம்பங்கி ராமையா கூறியதாவது:

இறைச்சி கடைகளில் ஆடுகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ ஆட்டு இறைச்சி, 400 ரூபாய் வரை விற்பனையாகிறது. அதனால், விவசாயிகளை நேரடியாக அணுகி உள்ளூர் இறைச்சி வியாபாரிகள் ஆடுகளை கொள்முதல் செய்கின்றனர்.

குறிப்பாக "கிடா' ஆடுகளுக்கு வரவேற்பு இருந்தது. தமிழக ஆடுகளுக்கு, கர்நாடகா, ஆந்திரா சந்தைகளில் நல்ல வரவேற்பு உள்ளதால், இரட்டிப்பு விலைக்கு விற்பனையாகும். ஆனால், தற்போது, சந்தைகளில் எதிர்பார்த்தளவு ஆடுகள், தரமான இறைச்சி கறி உள்ள கிடா ஆடுகள் கிடைப்பது சிரமமாக உள்ளது.

இவ்வாறு கூறினார்.

## காற்றினால் சேதமடைந்த வாழைகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

களக்காடு : களக்காடு பகுதியில் ‹றாவளி காற்றினால் பாதிக்கப்பட்ட வாழைகளுக்கு வாழை ஒன்றுக்கு 200 ரூபாய் நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு டவுன் பஞ். தலைவர் பி.சி.ராஜன் கலெக்டரிடம் மனு கொடுத்துள்ளார். களக்காடு மற்றும் சுற்று பகுதிகளில் வீசிய ‹றாவளி காற்றினால் ஆயிரக்கணக்கான வாழைகள் சாய்ந்தன. இதனால் விவசாயிகளுக்கு லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ‹றாவளி காற்றினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வாழை ஒன்றுக்கு 200 ரூபாய் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என டவுன் பஞ். தலைவர் ராஜன் களக்காடு பகுதியில் காற்றினால் பாதிக்கப்பட்ட வாழைகளை பார்வையிட வந்த கலெக்டரிடம் நேரில் கோரிக்கை மனு கொடுத்தார்.

## கால்நடைகளின் தீவன பற்றாக்குறையை போக்க அசோலாவுக்கு முக்கியத்துவம்

காரைக்குடி:வறட்சியால் கால்நடைகளில் தீவனத்துக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், அசோலா மூலம், அவற்றை நிவர்த்தி செய்ய, கால்நடை துறை மருத்துவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.இந்த ஆண்டு மழையின்மையால், குளம், குட்டைகளில் கூட புற்கள் இல்லை. விவசாயம் இல்லாததால், வைக்கோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரசின் கறவை மாடு வழங்கும் திட்டம் மூலம், கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்போர் அதிகரித்து வருகின்றனர். இதனால், தீவனங்களின் விலையும் அதிகரித்து வருகிறது. இப்பிரச்னைகளை களையும் வகையில், கால்நடை வளர்ப்போர், வீடுகளில் அசோலாவை பயிரிட்டு, அதன் மூலம் அந்த தேவையை நிறைவேற்ற வலியுறுத்துமாறு, கால்நடை மருத்துவர்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், பாலி யூனித்தேன் ("ஹை டென்சிட்டி') எனப்படும் ஷீட், இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போதைய "ஷீட்' ஐந்து ஆண்டு வரை தாங்கும் தன்மை உடையது.கால்நடை டாக்டர் ஒருவர் கூறியதாவது: சிவகங்கை மாவட்டத்தில் 100 சதவீத மானியத்தில், 290 விவசாயிகளுக்கு அசோலா பயிரிடுவதற்கான "ஷீட்' வழங்கப்பட உள்ளது. இதன், ஓரங்கள் வரப்பு போன்ற அமைப்பை கொண்டிருப்பதால், தனியாக இதை கம்பி போட்டு கட்ட வேண்டியது இல்லை. மேலும் குறைந்த பரப்பில் ஒரு முறை அசோலாவை பயிரிட்டு அதிக முறை பயனடையலாம், என்பதால், அரசு அசோலா பயிரிடுவதை ஊக்குவிக்க முன்வந்துள்ளது, என்றார்.

## வறட்சியிலும் கை கொடுக்கும் கருவேல மர விறகுத்தொழில்

ஆர்.எஸ்.மங்கலம்:மழை பொய்த்து நெல் உள்ளிட்ட விவசாயம் கைவிட்டாலும், கருவேல மர விறகு தொழில், விவசாயிகளுக்கு கை கொடுத்து வருகிறது.கடந்தாண்டு பருவமழை

பொய்த்ததால், திருவாடானை தாலுகாவில், 39 ஆயிரத்து 400 எக்டேரில் பயிரிடப்பட்ட நெல் அடியோடு பாதிக்கப்பட்டது. ஆர்.எஸ்.மங்கலம், சோழந்தூர், உப்பூர், சனவேலி உட்பட பல கிராமங்களிலும் கடும் வறட்சியால் பயறு வகைகள், பருத்தி போன்ற கோடை பயிர்களையும் சாகுபடி செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர்.விவசாயத்தை நம்பி பெரும் நஷ்டத்தை மட்டுமே சந்தித்த இவர்களுக்கு, கருவேல மர தொழில் கைகொடுத்து வருகிறது.ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில், தங்களது பட்டா இடங்களில் வளர்ந்துள்ள கருவேல மர விறகுகள், ஒரு டன் 2,500 ரூபாய் வரை, விலை போவதால், இத்தொழிலில் தீவிரம் காட்டி வருகின்றனர். ஆர்.எஸ்.மங்கலம் விவசாயிகள் கந்தப்பன், மூர்த்தி கூறுகையில், ""கரும்புக்கு கிடைக்கும் விலையை விட, கருவேல விறகுக்கு கூடுதல் விலை கிடைத்து வருகிறது. கருவேல மரங்களின் சிறு குச்சிகளும் விலை போவதால் பொருளாதார தட்டுப்பாட்டை சமாளித்து வருகிறோம்," என்றனர்.

## ஒரு கிலோ ஆப்பிள் பழம் ரூ.200 கிறங்கடிக்குது பழங்களின் விலை

தேனி:தேனி மாவட்டத்தில், பழங்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன. கோடை வெயில் தொடங்கி உள்ள நிலையில், பழங்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. தற்போது உள்நாட்டு ஆப்பிள் சீசன் இல்லை என்பதால், சீனா, நியூசிலாந்தில் இருந்து ஆப்பிள் வருகிறது. சீனா ஆப்பிள் தரத்திற்கு ஏற்ப, கிலோ ரூ.150 முதல் ரூ.180 வரையும், நியூசிலாந்து நாட்டு ஆப்பிள் கிலோ ரூ.200க்கும் விற்கப்படுகிறது. லோக்கல் ஆரஞ்சு சீசனும் முடிந்து விட்டதால், ஆஸ்திரேலியா விதையில்லா ஆரஞ்சு விற்கப்படுகிறது. இதன் விலை கிலோவிற்கு 120 ரூபாயாக உள்ளது. அன்னாசி பழத்தின் விலையும் பழம் 35 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இரண்டு வாரங்களுக்கு முன் ஒரு பழம் 15 ரூபாய் முதல் 20 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மாம்பழம் சீசன் தற்போது தொடங்கி உள்ளதால், விலை அதிகமாக உள்ளது. செந்தூரம் கிலோ 60 ரூபாய்க்கும், காளப்பாடி கிலோ 70 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இன்னும் சில நாட்களில் வரத்து கூடியதும் மாம்பழத்தின் விலை குறையும், என வியாபாரிகள் தெரிவித்தனர். மற்ற பழங்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. விதையில்லா திராட்சை கிலோ 100 ரூபாய், கருப்பு திராட்சை கிலோ 60 ரூபாய்க்கும், மாதுளை கிலோ 120 ரூபாய் முதல் 160 ரூபாய்க்கும், சாத்துக்குடி 50 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. வாழைப்பழம் ஒன்றுக்கு 3 ரூபாயில் இருந்து, 8 ரூபாய் வரை ரகத்திற்கும், தரத்திற்கும் ஏற்ப விற்கப்படுகிறது.

## கூடலூரில் திடீர் மழை

கூடலூர்:கூடலூரில் பெய்த திடீர் கன மழையால், மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். பருவ மழை மாற்றம் காரணமாக, வழக்கமாக பெய்ய வேண்டிய கோடை மழை பெய்யவில்லை.

இதனால், கூடலூர் பகுதியில் கோடை மழையை நம்பி இருந்த மானாவாரி விவசாயம் செய்ய முடியவில்லை. மழையை எதிர்பார்த்து சில விவசாயிகள் உழவு உள்ளிட்ட முன்னேற்பாடுகளை செய்து வைத்திருந்தனர். மழை பெய்யாததால் அனைத்தும் வீணானது. கடந்த 4 மாதங்களுக்கு மேல், கூடலூர் பகுதியில் மழை பெய்யாததால், விவசாயிகள் பெரும் கவலையில் இருந்தனர். கடந்த ஒரு வாரமாக மழை வருவதற்கான அறிகுறியும், மேகமூட்டங்கள் காணப்பட்டன.இதை எதிர்பார்த்து, பளியன்குடி, ஊமையன்தொழு, லோயர்கேம்ப், பெருமாள் கோயில், சுரங்கனாறு பகுதிகளில், மானாவாரி விவசாய நிலங்களில் நடவு செய்வதற்காக உழவு பணிகளை செய்தனர். நேற்று மாலை 3 மணிக்கு திடீரென, பலத்த காற்றுடன் கன மழை பெய்தது. இரண்டு மணி நேரத்திற்கும் மேல் இந்த மழை பெய்ததால், மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

### தாண்டிக்குடியில் 5.மி.மீ., மழை

தாண்டிக்குடி: தாண்டிக்குடியில் நேற்று மதியம் 1 மணி நேரம் மிதமான மழை பெய்தது.கடந்த சில மாதங்களாக நீடித்த வறண்ட வானிலை மற்றும் சுட்டெரிக்கும் வெயிலால் நீர்நிலைகள் வறண்டு விவசாயம் பாதித்தது. தொடர்ந்து குடிநீர் தட்டுப்பாடு நீடித்து வந்தது. இதற்கிடையே குறுவிவசாயங்கள் போதிய தண்ணீரின்றி மகசூல் பாதிப்பு ஏற்பட்டது. நேற்று மதியம் 2 மணிக்கு பெய்த மழை 3 மணி வரை பெய்த நிலையில் 15.மி.மீ., பதிவாகியது.பண்ணைக்காடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் பரவலாக மழை பெய்தது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

18.04.2013 A.M

---

## இலவச கால்நடை மருத்துவ முகாம்

சிவகங்கை, : மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை சார்பில் கல்லல் ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வெற்றியூர், மாலைக்கண்டான், கீழப்பூங்குடி, ஆலம்பட்டு, குருந்தம்பட்டு, எஸ்ஆர்.பட்டிணம் ஆகிய 6 இடங்களில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. கால்நடை டாக்டர்கள் பாலச்சந்தர், ராஜேஷ் முன்னிலை வகித்தனர். ஆடு, மாடு, கோழி, நாய் போன்ற கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், மலடு நீக்கம், சினை பரிசோதனை, செயற்கை கருவூட்டல், ஆண்மை நீக்கம், பொது சிகிச்சை, சுண்டுவாத மற்றும் பொது அறுவை சிகிச்சை போன்ற சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை உதவி செயற்பொறியாளர் ஈஸ்வரன், நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர்கள் ஷீலாதேவி, ஜாபர்அலி, மாவட்ட கவுன்சிலர் சுப்பு அம்பலம் கலந்து கொண்டனர்.

## ஏப்.19ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திண்டுக்கல், : திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் ஏப்ரல் 19ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. கடந்த மாதம் 22ம் தேதி நடந்த கூட்டத்தில் கொடுக்கப்பட்ட மனுக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட உள்ளன. அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் பங்கேற்று கோரிக்கைக்கு தீர்வு காண உள் ளனர். எனவே விவசாயிகள் தவறாது பங்கேற்க வேண்டும் என கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

## உழவர் பெருநாள் துவக்க விழா

பழநி, : பழநி அருகே பாப்பம்பட்டியில் உழவர் பெருநாள் துவக்க விழா நடந்தது. விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வேணுகோபாலு எம்எல்ஏ வழங்கினார். யூனியன் தலைவர் செல்லச்சாமி

முன்னிலை வகித்தார். பாப்பம்பட்டி ஊராட்சிமன்றத்தலைவர் கர்ணன் கலந்துகொண்டனர். வேளாண் மை துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறியியல்துறை, வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம், அமராவதி சர்க்கரை ஆலை சார்பில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தன.

துறைவாரியான தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்விளக்கங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டன. ஏற்பாடுகளை பழநி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தா மணி, வேளாண் அலுவலர்கள் காளிமுத்து, கணே சன், துணை வேளாண் அலுவலர் துரைச்சாமி செய்திருந்தனர்.

வேடசந்தூர்:

வேடசந்தூர் அருகே உள்ள நாகம்பட்டியில் வேளாண்மைத்துறை சார்பில் உழவர் பெருவிழா நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் தங்கவேல் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு துணைத்தலைவர் நிலா தண்டபாணி முன் னிலை வகித்தார். வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுருளியப்பன் வரவேற்றார். விவசாயிகளுக்கு இடுபொருட்கள் மற்றும் ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு ஆகியவற்றை வேடசந்தூர் ஒன்றியக்குழு தலைவர் சுப்பிரமணியன் வழங்கி னார். வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, பட்டுவளர்ச்சித்துறை, விதைச்சான்றுத்துறைகளின் அலுவலர்கள் பங்கேற்று பல்வேறு திட்டப்பணிகள் குறித்து பேசி னர். வெள்ளையகவுண்டனூர். வே.புதுக்கோட்டை ஆகிய ஊர்களிலும் உழவர் பெருவிழா நடந்தது.

திண்டுக்கல் : கோட்டூர் ஆவாரம்பட்டியில் உழவர் பெருவிழா நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் அருள்அரசு வரவேற்றார். அகரம் பேரூராட்சி துணைத்தலைவர் சக்திவேல் தலைமை வகிக்க, திண்டுக்கல் ஒன் றியச் செயலளர் ஜெயசீலன் முன்னிலை வகித்தார். தொழில்நுட்பம் குறித்து வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சம்பத்குமார் பேசினார். உயிர் உர நேர்த்தி, மண்மாதிரி எடுத்தல், வாழைக்கட்டை நேர்த்தி ஆகிய செயல்விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட்டன. ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு, உயிர் உரங்கள், நுண்ணுரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டன. வேளாண்மை அலுவலர்கள், ஆத்மா தொழில்நுட்ப அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## வெடித்து சிதறும் இலவம் பஞ்சுகளால் மக்கள் அவதி

புதுச்சேரி, :  புதுவை நகரப்பகுதியில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் வளர்ந்துள்ள இலவம் பஞ்சு மரங்களில் இருந்து வெடித்து சிதறும் பஞ்சுகளால் பொதுமக்கள் வெகுவாக

பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுவை தாவரவியல் பூங்கா, தட்டாஞ்சாவடி தொழிற் பேட்டை, ஒழுங்குமுறை விற்பனை கூட வளாகம், லாஸ்பேட்டை தாகூர் கல்லூரி அருகேயுள்ள பகுதிகளில் இலவம் பஞ்சு மரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இம்மரங்களில் நவம்பர் மாதம் பூ பூப்பதும், பின்னர் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் காயாக மாறிவிடும். தொடர்ந்து ஏப்ரல், மே மாதங்களில் இலவம் காய்கள் வெடித்து சிதறும். அப்போது அதிலிருந்து பஞ்சுகள் வெளியாகும். இது ஆண்டுதோறும் வழக்கமான நிகழ்வாகும்.

அதில் குறிப்பாக ஏப்ரல் மாதத் தில் வெடித்து சிதறும் இலவம் பஞ்சுகள் காற்றில் பரவி பொது மக்களுக்கு பலவகை தொந்தரவு களை ஏற்படுத்துகின்றன. தட்டாஞ்சாவடி, மறைமலையடி கள் சாலை உள்ளிட்ட முக்கிய இடங்களில் உள்ள மரங்களில் பஞ்சுகள் வெடித்து சிதறுவதால், தினந்தோறும் மக்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். அவ் வழியாக செல்லும் வாகன ஓட்டி களின் கண்களில் பஞ்சு விழுவ தால் விபத்துகள் ஏற்படுகிறது.

அதுமட்டுமின்றி வெடித்து சிதறும் பஞ்சுகள் அவ்வழியே செல்லும் ஆஸ்துமா நோயாளிகள், குழந்தைகளை பதம் பார்த்து விடுகின்றன. அவர்களது மூச்சுக்குழலில் சென்று சிக்கிக்கொள்ளும் பஞ்சுகளால் அன்று முழுவதும் மூச்சு திணறல் ஏற்படுகிறது.  உரிய சிகிச்சைக்கு பின்னரே அவர்களால் இயல்பு நிலைக்கு திரும்ப முடிகிறது.

இப்படி பெரியோர் முதல் குழந்தைகள் வரை அனைவரையும் இலவம் பஞ்சுகள் படாதபாடு படுத்து விடுகிறது. எனினும் சம்பந்தபட்ட துறையினர் இதனை கண்டுகொள்ளாமல் உள்ளனர். தற்போது புதுவை நகரப்பகுதியில் உள்ள அனைத்து இலவ மரங்களிலும் காய்கள் வெடித்து சிதறி பஞ்சுகள் காற்றில் பரவி வருகிறது.

எனினும் வழக்கம்போல் இந்தாண்டும் இப்பிரச்னையை முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து தடுக்க அரசு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

மாறாக தற்போது வெடித்து சிதறும் சமயத்தில், தீயணைப்பு துறையை கொண்டு பஞ்சுகள் தண்ணீரை பீய்ச்சி அடித்து நிலைமையை சரி செய்து வருகின்றனர்.

இன்னும் ஏராளமான மரங்களில் இலவம் காய்கள் வெடித்து சிதறும் நிலையில் உள்ளது. எனவே முன்கூட்டியே இலவம் காய்களை பறிக்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பு.

இன்றைய வேளாண் செய்திகள்

18.04.2013 A.M

## அரிமளம் அருகே மிரட்டுநிலையில் விவசாய குழுவிற்கு விலையில்லா பவர் டில்லர் எம்.எல்.ஏ. வழங்கினார்

அரிமளம்,

அரிமளம் அருகே உள்ள மிரட்டுநிலையில் நடந்த உழவர் பெருவிழாவில் விவசாய குழுவிற்கு விலையில்லா பவர் டில்லரை வைரமுத்து எம்.எல்.ஏ. வழங்கினார்.

உழவர் பெருவிழா

அரிமளம் ஒன்றியத்தை சேர்ந்த மிரட்டுநிலையில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவுக்கு திருமயம் எம்.எல்.ஏ. வைரமுத்து தலைமை தாங்கி, சுதந்திரபுரம் ஆதி திராவிடர் விவசாய குழுவிற்கு விலையில்லா பவர் டில்லர், ஒருங்கிணைந்த கையேடு உள் ளிட்டவற்றை வழங்கி பேசி னார். அவர் பேசுகையில், விவ சாய தொழில்நுட்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி உற்பத்தியை 2 மடங்காகவும், வருமானத்தை 3 மடங்காகவும் பெருக்க விவசாயிகள் பாடுபட வேண்டும், என்றார்.

அரசின் சலுகைகள்- மானியங்கள்

விழாவுக்கு மாவட்ட ஊராட் சிக்குழு துணை தலைவர் சந்திரன், ஒன்றியக்குழு தலைவர் கணேசன், ஒன்றிய செயலாளர் பழனியப்பன், ஊராட்சி மன்ற தலைவர் பார்த்தசாரதி, ஒன்றியக்குழு உறுப்பினர் கற்பக சுந்தரி முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக அரி மளம் வேளாண்மை உதவி இயக்குனர் உதயகுமார் வர வேற்று பேசினார்.

அவர் பேசுகையில், பாரம் பரியமிக்க பொருட்களை இழந்து வருவதாகவும், இளநீர், பருத்தி ஆடைகள் மற்றும் சிகக்காய் ஆகியவற்றின் மகத்துவம் பற்றியும், அவற் றை பயன்படுத்துவதின் அவசியம் குறித்து எடுத்து கூறுவதற்காகவும், விவசாய துறையை சேர்ந்த சகோதர துறைகளில்

செயல் படுத்தப் படும் திட்டங்கள் குறித்தும், அரசு வழங்கும் சலுகை கள் மற்றும் மானியங்கள் குறித்தும் எடுத்து கூறுவதற்காகவும், உழவர் பெருவிழாக்கள் நடத் தப்படுவதாக தெரிவித்தார்.

கைத்தெளிப்பான்

விழாவில் தோட்டக் கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு ராக்கர் கைத்தெளிப்பான் மானிய விலையில் வழங்கப்பட்டது. வேளாண்மை பொறியியல் துறை சார்பில் சுழல் தெளிப் பான் பற்றி விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது. உயர் உர விதை நேர்த்தி பற்றி விவசாயி களுக்கு எடுத்து கூறப்பட்டது. விழாவில் விவசாய தொழில் நுட்ப கருத்துக்காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன.

விழாவில் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஆவடித்தேவன், அட்மா கமிட்டி தலைவர் சண்முகம், அரிமளம் வெற்றி, சொசைட்டி செயலாளர் முருகன், கே.புதுப்பட்டி முருகன், வம்பன் உதவி பேராசிரியர் பாக்கியராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் துணை வேளாண்மை அலுவலர் பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

## கிள்ளனூரில் விவசாயிகளுக்கு, ரூ.3 லட்சத்தில் நலத்திட்ட உதவிகள் உழவர் பெருவிழாவில் வழங்கப்பட்டன

கீரனூர்,

குன்னண்டார்கோவில் ஒன்றியம் கிள்ளனூரில் நடந்த உழவர் பெருவிழா வில் விவசாயிகளுக்கு ரூ.3 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் மனோகரன் வழங்கினார்.

உழவர் பெருவிழா

குன்னண்டார்கோவில் ஒன்றியத்தை சேர்ந்த கிள்ளனூ ரில் உழவர் பெருவிழா நடந் தது. விழாவுக்கு மாவட்ட கலெக்டர் மனோகரன் தலைமை தாங்கினார்.

இந்த விழாவில் வேளா ண்மைத்துறை, வேளாண் பொறியியல்துறை, விதை சான்றளிப்புத்துறை, தோட்டக்கலைத்துறை, கால் நடைத்துறை, வேளாண் அறிவியல் நிலையம், பட்டு வளர்ப்புத்துறை, ஆவின், வேளாண் விற்பனை வணிகம், குரும்பூர் சர்க்கரை ஆலை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில் திட்ட விளக்க கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. அவ ற்றை மாவட்ட கலெக் டர் மற்றும் அலுவலர்கள் உள் ளாட்சி பிரதிநிதிகள் பார்வை யிட்டனர்.

நலத்திட்ட உதவிகள்

இந்த விழாவில் 12 விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த கையேடுகளையும், 14 விவசாயிகளுக்கு மானிய சலுகையில் வேளாண் இடுபொருட்களும், தேசிய தோட்டக்கலை இயக்கத் தின் சார்பில் 25 மாணவ, மாணவி களுக்கு தோட்ட பணியாளர் பயிற்சி சான்றிதழ்களையும் என்பது உள்ளிட்ட மொத்தம் ரூ.3 லட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவி களை கலெக்டர் மனோகரன், பயனாளிகளுக்கு வழங்கி பேசினார்.

இந்த விழாவில் மாவட்ட ஊராட்சி தலைவர் ராமையா, மாவட்ட வருவாய் அலுவலர் நாகராசன், ஆர்.டி.ஓ. முத்துமாரி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் துரைராஜ், ஒன்றிய ஆத்மா கமிட்டி தலைவர் பால்ராஜ், ஒன்றியக்குழு உறுப்பினர் முத்துலெட்சுமி, ஊராட்சி மன்ற தலைவர் கோவிந்தசாமி மற்றும் அதி காரிகள், வேளாண் துறை சார்ந்த அனைத்துத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்ட னர்.
முன்னதாக வேளாண் இணை இயக்குநர் எம் பெருமாள் வரவேற்று பேசி னார். முடிவில் குன்னண் டார்கோவில் வேளாண் உதவி இயக்குநர் சங்கரலெட்சுமி நன்றி கூறினார்.

## பென்னகோணம் கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் நலத்திட்ட உதவிகள் ஒன்றிய குழுத்தலைவர் வழங்கினார்

குன்னம்,

குன்னம் அருகே பென்ன கோணம்¢ கிராமத்தில் நடைபெற்ற இரண்டாம் பசுமைபுரட்சி உழவர் பெருவிழாவில் விவசாயி களுக்கு நலத்திட்ட உதவிகளை ஒன்றிய குழுத் தலைவர் கிருஷ்ணகுமார் வழங்கி னார்.

உழவர் பெருவிழா

பென்னகோணம்¢¢ கிராமத் தில் இரண்டாம் பசுமை புரட்சி உழவர் பெருவிழா தொடக்கவிழா வேளாண்மை மற்றும் தொடர்புடைய துறை களின் சார்பில் நடை பெற்றது.
விழாவிற்கு வேப்பூர் ஒன்றியக்குழுத்தலைவர் கிருஷ்ணகுமார் தலைமை தாங்கி 5 விவசாயிகளுக்கு விசை தெளிப்பான் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

பென்னகோணம்¢ ஊராட்சி மன்ற தலைவர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தார். அனை வரையும் வேப்பூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சந்திரசேகரன் வரவேற்றார்.

பல்வேறு விளக்கம்

உழவர் பெருவிழா நிகழ்ச்சி யில் வேப்பூர் வட்டார வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் குண சேகரன் தோட்டகலை துறை உதவி வேளாண் அலு வலர் காந்திநாதன், வேளாண் விற்பனை உதவி வேளாண் அலுவலர் பிச்சை, வேளாண் அறிவியல் மைய விரிவாக்க அலுவலர் வசந்தகுமார், எறையூர் சர்க்கரை ஆலை கரும்பு அலுவலர் காசிராஜன், பென்னகோணம் உதவி கால்நடை மருத்துவர் கலிய பெருமாள், உள்பட வேளாண்மைத்துறை அலு வலர்கள், அரசின் திட்டங் களை விளக்கி பேசினர். விழாவில் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். இறுதியில் வேளாண் உதவி அலுவலர் அமிர்தவள்ளி நன்றி கூறினார்.

ரதம்

உழவர் பெருவிழாவை யட்டி உழவர் பெருவிழா ரதத்தினை வேப்பூர் ஒன்றியக் குழுத்தலைவர் கிருஷ்ணகுமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்.
உழவர் பெருவிழாவில் மருத்துவ குணம் நிரம்பிய பாரம்பரியம்மிக்க வேளாண்மை பொருட்கள் பல்வேறு மூலிகை செடிகள், விவசாய கருவிகள், வேளாண் பொருட்கள், விதைகள் கண் காட்சியாக வைக்கப்பட்டி ருந்தன. உழவர் பெருவிழா நிகழ்ச்சியில் வேளாண்மை தொடர்புடைய துறைகளின் தொழில்நுட்ப விளக்கங்கள் குறித்த வீடியோ படக் காட்சிகள் திரையிடப்பட்டன. மண்மாதிரி சேகரித்தல், திருந் திய நெல்சாகுபடி, செம்மை கரும்பு சாகுபடி குறித்து விளக்கம் அளிக்கப் பட்டன.
முடிவில் 256 விவசாயி களுக்கு 13 வகையான உணவு வழங்கப்பட்டது.